

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி விக்கிரவாண்டி வட்டம் வாக்கூர் அருகே உள்ள எரிச்சனாம்பாளையம் கிராமத்தில் சாலை விபத்தில் பலியான காவலர் குடும்பத்திற்கு ரூ.25 இலட்சம் நிதியுதவிக்கான காசோலை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் சி பழனி, மாவட்ட எஸ்.பி தீபக் ஸ்வாச் , சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ சிவா, டாக்டர் இரா.இலட்சுமணன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாவட்ட துணைச் செயலாளர் தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் ஜெய.ரவிதுரை, ஒன்றிய குழு தலைவர் சங்கீத அரசி, ரவி துரை உள்ளிட்ட கழகத்தினர், அரசுத் துறை அதிகாரிகள் பலர் உடனிருந்தனர்.

## பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; ஒன்றிய பா.ஜ.க. அரசின் "ஆயுஷ்மான் பாரத் திட்டம்" வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்திருக்கிறதே ?

**பட்டணம் :** ஆமாமய்யா; "ஆயுதம் செய்வோம், நல்ல காகிதம் செய்வோம் " என்று பாடினான் மகாகவி பாரதி!

அதையே இவர்கள், வெற்று ஆரவாரம் செய்வோம்; வீண் காகிதத் திட்டங்களையே செய்வோம் - என்று மாற்றிக் கொண்டுவிட்டார்களோ!

### ஊட்டச்சத்து குறைபாடுள்ள

# 10 லட்சம் குழந்தைகளை மீட்டெடுத்த திராவிட மாடல் அரசு!

## உயர் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு ஏற்பாடு!

சென்னை, நவ.3-

ஒரு குழந்தையின் வாழ்க்கையில் முதல் ஆயிரம் நாட்களுக்குள் உண்ணும் மோசமான ஊட்டச்சத்து அவர்களுக்கு பல எதிர்மறை காரணங்களை ஏற்படுத்தும். இது குன்றிய வளர்ச்சி, அறிவாற்றல் திறன் மற்றும் பள்ளி செயல்திறன் குறைதல், வயிற்றுப்போக்கு போன்ற நோய்களுக்கு வழிவகுக்கும். ஒரு அறிக்கையின்படி இந்தியாவில் 68 சதவீதம் குழந்தைகள் 5 வயதிற்கு முன்பே இறக்கின்றனர் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

தமிழகத்தில் ஆரோக்கியமான குழந்தைகளே, நாட்டின் வளமான எதிர்காலம் என்பதை கருத்தில் கொண்டு, முதல்வர் ஸ்டாலின் கடந்த 2022ம் ஆண்டு மே மாதம் 7ம் தேதி அன்று சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளை நலமுடன் வளர்த்தெடுக்கும் நோக்கத்துடன், மாவட்ட அளவில் குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனைகள் செய்கிறோம் என்றும் மருத்துவ உதவிகள் தேவைப்படும் குழந்தைகளுக்கு மருத்துவ உதவியும், ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகளுக்கு சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் ஒன்றும் ஏற்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது என்று கூறியிருந்தார்.

அதனை செயல்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை மற்றும் சுகாதாரத்துறை ஒன்றிணைந்து 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடு டைய குழந்தைகளுக்கு சிறப்பு மருத்துவப் பரிசோதனைகள் மேற்கொண்டு மருத்துவ உதவி தேவைப்படும் குழந்தை மற்றும் ஊட்டச்சத்து தேவைப்படும் குழந்தைகள் ஆகியோரைப் பிரித்த றிந்து குழந்தைகளின் ஊட்டச் சத்துக் குறைபாட்டினை நீக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'ஊட்டச்சத்தை உறுதி செய்' என்ற புதிய திட்டத்தினை 2022ம் ஆண்டு மே மாதம் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இதற்காக சிறப்பு மருத்துவ பரிசோதனை முகாம்கள் அனைத்து மாவட்டங்களிலும் நடந்தது. இதில் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் வயதிற்கேற்ற எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை ஆகிய குறைபாடுகளை கண்டறிந்து அவர்களின் ஆரோக்கியமான வளர்ச்சியினை மேம்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் 99 லட்சத்து 5 ஆயிரத்து 289 குழந்தைகள் உள்ளனர்.

இதில் 10 லட்சம் குழந்தைகளுக்கு பல்வேறு குறைபாடுகள் இருப்பது சோதனையில் கண்டறியப்பட்டது. இதன்மூலம் கடுமையான மற்றும் மிதமான ஊட்டச்சத்துக் குறைபாடுடைய வர்களாக கண்டறியப்பட்டுள்ள குழந்தைகள் கண்காணிக்கப்பட்டு அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் சிறப்பு மருத்துவப் பரிசோதனைகளுக்கு உட்படும் குழந்தைகளின் விவரங்கள் அதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்பு செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படும்.

மருத்துவப் பரிசோதனைகளுக்குப் பிறகு ஊட்டச்சத்து மட்டும் தேவைப்படும் குழந்தைகளுக்கு தனியாக சிறப்பு ஊட்டச்சத்து திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்துறை அதிகாரிகள் கூறியதாவது: தமிழகத்தில் ஊட்டச்சத்து குறைபாடு காரணமாக குழந்தைகள் பல்வேறு நோய் தாக்குதல்களுக்கு ஆளாகின்றனர். இதை முற்றிலும் தடுக்கும் வகையில் தமிழக அரசின் சார்பில் ஊட்டச்சத்தை உறுதி செய் என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் 6 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி துறை மூலமாக சிறப்பு வளர்ச்சி கண்காணிப்பு இயக்கம் நடத்தப்பட்டது. ஒவ்வொரு அங்கன்வாடி, ஆரம்ப பள்ளிகளில் சுகாதாரத்துறை சார்பில் மருத்துவகுழுவினர் நேரடியாக குழந்தைகளுக்கு பரிசோதனை மேற்கொண்டனர். அப்போது குறைபாடு உள்ள குழந்தைகள் குறித்து செயலியில் பதிவேற்றம் செய்து அவர்களுக்கு தேவையான மருத்துவ சேவை வழங்கப்படுகிறது.

குறிப்பாக குழந்தைகள் நல மருத்துவரிடம் அழைத்துச் சென்று அவர்களுக்கு எந்த மாதிரியான உடல் பாதிப்பு உள்ளது? அவர்களுக்கு என்ன சிகிச்சை அளிப்பது? மேலும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு சத்தான உணவுகள் வழங்குவது குறித்தும் ஆலோசனை வழங்கப்படுகிறது. குறிப்பாக குழந்தை களுக்கு பிறவி கோளாறு, ஊட்டச்சத்து குறைபாடு எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை, இருதய பாதிப்பு, மூளை வளர்ச்சி பாதிப்பு, மன பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

தேவைப்படும் குழந்தைகளுக்கு அரசு மருத்துவக்கல்லூரிகள் மற்றும் சென்னையில் உள்ள குழந்தைகள் நல மருத்துவமனைகள் மூலம் உயர் மருத்துவ சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்படும். அதிகளவில் பாதிப்பு உள்ள குழந்தைகளுக்கு முதல்வரின் விரிவான காப்பீட்டு திட்டத்தின் கீழ் இலவசமாக மருத்துவ சிகிச்சை முழுமையாக மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

★ குறைபாடு குழந்தைகளுக்கு நியூட்ரீஷியன் கிட்

பெரியவர்களை ஒப்பிடும் போது குழந்தைகளுக்கு அவ்வளவு விரைவாக எடை குறையாது அல்லது அதிகரிக்காது. ஆனால் உங்கள் குழந்தைக்கு மால் நியூட்ரீஷியன் என்ற ஊட்டச்சத்து குறைபாடு இருந்தால், குழந்தை எடை குறைந்து மெலிந்து, சில ஊட்டச்சத்துக்கள் இல்லாமல் இருந்தால் உடல் பருமனாகவும், விரைவாக உடல் எடையும் அதிகரிக்கும். குழந்தை களுக்கு அவ்வப்போது காய்ச்சல், சளி ஆகியயை தோன்றும்.

வளரும் குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தி பாக்டீரியா மற்றும் வைரஸ் தொற்றுகளை எதிர்த்து செயல்படும் பொழுது உடல் ஒரு சில அறிகுறிகளின் மூலம் வெளிப்படுத்தும். ஆனால் குழந்தைக்கு அடிக்கடி உடல்நலக் குறைபாடு ஏற்படுகிறது என்றால் அவர்களால் நோய் பாதிப்பை எதிர்த்து போராடும் அளவுக்கு போதிய ஊட்டச்சத்து கிடைப்பதில்லை என்று பொருள். இதை நிவர்த்தி செய்யும் வகையில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி துறை சார்பில் குறைபாடு உள்ள குழந்தைகளுக்கு நியூட்ரீஷியன் கிட் இலவசமாக வழங்கப்படுகிறது. அதில் ஊட்டச்சத்து அதிகமாக உள்ள உணவு பொருட்கள் இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

★ இந்தியாவில் 68 சதவீதம் குழந்தைகள் 5 வயதிற்கு முன்பே இறக்கின்றனர் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

★ தமிழகத்தில் மொத்தம் 99 லட்சத்து 5 ஆயிரத்து 289 குழந்தைகள் உள்ளனர். இதில் 10 லட்சம் குழந்தைகளுக்கு பல்வேறு குறைபாடுகள் இருப்பது சோதனையில் கண்டறியப்பட்டது.

★ குழந்தைகளுக்கு பிறவி கோளாறு, ஊட்டச்சத்து குறைபாடு எடையின்மை, உயரமின்மை மற்றும் மெலிவுத்தன்மை, இருதய பாதிப்பு, மூளை வளர்ச்சி பாதிப்பு, மன பாதிப்பு உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது.

★ ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு 8 வாரங்களுக்கு அளிக்க ரூ.18.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

★ ஊட்டச்சத்து குறைபாடுடைய 06 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது.

★ 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை தமிழகத்தில் ஊட்டச்சத்து உறுதி செய்யும் திட்டத்தின் கீழ் 6 வயது வரையுள்ள மிதமான மற்றும் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 10.26 லட்சம் குழந்தைகள் ஆர்எஸ்பிகே குழுவினரால் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டனர். அதில் 2 லட்சம் குழந்தைகள் கடுமையான ஊட்டச்சத்து குறைபாட்டால் பதிக்கப்பட்டு இருந்தனர். அதில் 43,200 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை உட்பட வெவ்வேறு மருத்துவச் சிகிச்சைகள் மாவட்ட மருத்துவமனைகளில் அளிக்கப்பட்டது.

ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளுக்கு உண்பதற்கு தயாராக உள்ள சிகிச்சை உணவு 8 வாரங்களுக்கு அளிக்க ரூ.18.68 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோன்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையினால் ஊட்டச்சத்து குறைபாடுடைய 06 மாதக் குழந்தைகளின் தாய்மார்களுக்கு ரூ.8.68 கோடி செலவில் சத்துப் பெட்டகம் வழங்கப்பட்டுள்ளது. 6 மாதம் முதல் 6 வயதுடைய கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 92,015 குழந்தை களுக்கு சிறப்பு சிகிச்சை உணவு அளிக்கப்பட்டதில் 61,788 (66.6%) குழந்தைகள் ஊட்டச்சத்து நிலையில் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

அதேபோன்று 06 மாதக் கடுமையான ஊட்டச்சத்து குறைபாடுடைய 14,901 குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்கள் பிறப்பு கூடுதல் சத்து உட்கொண்டதினால் 13,319 (89.4%) குழந்தைகளின் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. அனைத்துக் குழந்தைகளின் வளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஊட்டச்சத்து குறைபாடுடைய குழந்தைகளின் வளர்ச்சியில் முன்னேற்றத்தினை கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல் குழந்தையின் வளர்ச்சியில் குறிப்பாக முதல் 6 மாதத்தில் ஊட்டச்சத்தின் முக்கியத்து வத்தினைப் பற்றி மிகுந்த விழிப்புணர் வினை உருவாக்கியுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் பிறவியிலேயே கண்டறியப்பட்ட இருதய நோய், பிறவியிலேயே கண்டறியப்பட்ட மூளை வளர்ச்சி குறைபாடு, பிறவி பார்வை குறைபாடு, பிறவி காது கேளாமை, பிறவி கால் ஊனம் போன்ற பிறவி குறைபாடுகளை உடைய 3,038 குழந்தைகளுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்பொழுது அவர்கள் நலமாக உள்ளனர்.

### தேசிய வைரஸ் ஆய்வக நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது!

# குரங்கம்மை தொற்று நோய் தமிழ்நாட்டில் இல்லை!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, நவ.3-

குரங்கம்மை தொற்று நோய் (MPox) பயணியின் பரிசோதனை முடிவு தேசிய வைரஸ் ஆய்வக நிறுவனம் (National Institute of Virology) பூனாவிலிருந்து பெறபட்ட இறுதி ஆய்வறிக்கையும் குரங்கம்மை தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தியுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



குரங்கம்மை முதன் முதலில் 1958 -ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. ஆப்பிரிக்காவிலுள்ள காங்கோ நாட்டில் வேகமாக பரவி வரும் குரங்கம்மை தொற்றால் பொது சுகாதார அவசர நிலையாக (Public Health Emergency of International Concern), 14.08.2024 அன்று உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது.

தமிழகத்தில் குரங்கம்மை தொற்று நோய் தடுப்பதற்காக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அனைத்து மாவட்ட சுகாதார அலுவலர்களுக்கு குரங்கம்மை தொற்று நோய் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி சுற்றறிக்கை அனுப்பபப்பட்டுள்ளது. மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் குரங்கம்மை நோய் பற்றிய நிலையான வழிமுறை கையேட்டினை 02.09.24 அன்று வெளியிட்டுள்ளார்கள்

(https://portal.tndphpm.com/tndphpmfiles/1730447798_sop_for_mpox.pdf)

விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களுக்கும் குரங்கம்மை தொற்று நோய் குறித்த தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் காய்ச்சல், தலைவலி, உடல்வலி மற்றும் தடிப்புகள் போன்ற அறிகுறியுடன் வருவோர்களை தனிமைப்படுத்தி பொது சுகாதாரத் துறைக்கு தெரியப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்களிடம் நேரடி தொடர்பு இல்லாமல் இருக்க வேண்டும். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மாநகரங்களிலுள்ள சர்வதேச விமான நிலையங்களில் குரங்கம்மை நோய் தீவிர கண்காணிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தலா ஒரு 108 அவசர ஊர்தி தற்காப்பு, கவச உடை அணிந்த பணியாளர்களுடன் தேவை ஏற்படின் பயன்படுத்திட ஏதுவாக தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும், சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனை, மதுரை அரசு ராஜாஜி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோவை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மற்றும் திருச்சி கி.ஆ.பெ.விஸ்வநாதன் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் சிறப்பு தனிமைப்படுத்துதல் வார்டு அமைக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது.

இம்மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களுக்கு குரங்கம்மை கையாளுதல் பற்றிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் சென்னை, கிண்டியில் உள்ள கிங் நோய் தடுப்பு பரிசோதனை நிலையத்தில் குரங்கம்மை கண்டறியும் வசதி உள்ளது.

31.10.24 அன்று சார்ஜா நாட்டில் இருந்து திருச்சி விமான நிலையம் வந்தடைந்த ஒரு பயணிக்கு குரங்கம்மை தொற்று சந்தேகிக்கப்பட்டது. விமான நிலைய மருத்துவக் குழுவினர் அப்பயணியை தற்காப்பு உடையுடன் 108 ஆம்புலன்ஸ் மூலமாக திருச்சி மகாத்மா காந்தி மருத்துவமனைக்கு பரிசோதனை மற்றும் மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அம் மருத்துவமனையில் இருந்து சந்தேகத்திற்குரிய நபர் தப்பி விட்டதாக மருத்துவமனை நிர்வாகம் காவல் துறையில் புகார் அளித்ததை தொடர்ந்து அந்த நபர் திருவாரூர் மாவட்டத்தில் கண்டறியப்பட்டு உடனடி மருத்துவ ஆலோசனைக்காக நேற்று மாலை 10 மணியளவில் திருவாரூர் மருத்துவக் கல்லூரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் தனிமைப்படுத்தப்பட்ட மேல் சிகிச்சை மற்றும் குரங்கமை பரிசோதனைக்காக திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து குரங்கம்மை பரிசோதனைக்காக உரிய மாதிரிகள் அதிகாலை மூன்று முப்பது மணியளவில் சேகரிக்கப்பட்டு சென்னை கிங் இன்ஸ்டியூட் ஆய்வகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அம்மாதிரிகள் 01.11.24 அன்று சென்னை கிங் இன்ஸ்டியூட் ஆய்வகத்தில் பாதுகாப்பாக பெறப்பட்டு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இம்மாதிரியின் ஒரு பகுதி, பூனாவில் உள்ள தேசிய வைரஸ் ஆய்வக நிறுவனத்திற்கு ( National Institute of Virology ) குரங்கம்மை உறுதிப்படுத்தும் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை கிங் இன்ஸ்டியூட் ஆய்வகத்தின் ஆரம்ப கட்ட பரிசோதனை முடிவில், சம்பந்தப்பட்ட நபருக்கு குரங்கம்மை தொற்று இல்லை என கண்டறியப்பட்டது. பெறப்பட்ட மாதிரியை பரிசோதனை செய்ததில் நோயாளி சின்னம்மை வைரசால் (Chicken Pox/ varicella zoster) பாதிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் நேற்று (02.11.24) மாலை, தேசிய வைரஸ் ஆய்வக நிறுவனம் (National Institute Of Virology) , பூனாவில் இருந்து பெறப்பட்ட இறுதி ஆய்வறிக்கையும் குரங்கம்மைத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தி உள்ளது. எனவே பொதுமக்கள் இது குறித்து அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் குரங்கம்மை குறித்த சந்தேகங்களுக்கு 104 என்ற எண்ணை தொடர்பு கொண்டு பேசலாம் என்றும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கடந்த 21 நாட்களில் குரங்கம்மை தொற்று பரவி உள்ள 116 நாட்டிற்கு பயணம் மேற்கொண்டவர்கள், தங்களுக்கு குரங்கம்மை அறிகுறிகள் ( காய்ச்சல் ,தோல் கொப்புளங்கள், கழுத்தில் நெறி கட்டி) காணப்பட்டால் உடனடியாக அருகில் உள்ள அரசு மருத்துவமனைகள்/ சுகாதார மையங்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையின் வாயிலாக கேட்டுக் கொண்டுள்ளார்.

### திருவள்ளூர் மத்திய மாவட்ட

# தகவல் தொழில்நுட்ப அணி - ஆலோசனைக் கூட்டம்!

**மாவட்ட செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அறிவிப்பு!**



திருவள்ளூர் மத்திய மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசனைக் கூட்டம், இன்று 03-11-2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 3;30 மணிக்கு, (ஆவடி ரயில் நிலையம் அருகில் திருமலைராஜபுரம், மாவட்ட கழக அலுவலகத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.ஜெ.ரமேஷ், மாநில மாவட்ட நிர்வாகிகள் மா.இராஜி சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். முன்னதாக பகுதி கழகச் செயலாளர் ஜி.ராஜேந்திரன் வரவேற்புரை ஆற்றுகிறார். முடிவில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ஆர்.பிராவின்குமார் நன்றி கூறுகிறார்.

பொருள்:

1. வாக்களர் பட்டியல் திருத்தப் பணிகள் குறித்து
2. 2026 சட்டமன்ற தேர்தல் பணிகள் குறித்து
3. கழக ஆக்கப் பணிகள்.

**அமைச்சர் ஆவடி சா.மு.நாசர்,**
செயலாளர், திருவள்ளூர் மத்திய மாவட்ட தி.மு.க.



வேலூர் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் நடந்த தி.மு.க. அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநில கொள்கைப் பரப்பு துணை செயலாளர் டாக்டர் வீ.எஸ். விஜய், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் மு.பாபு, மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.